பெப்ரவரி 3-9

# பாடம் 6

# உக்கிராணக்காரனின் அடையாளங்கள்

**மனன வசனம்**

**எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரர் என்றும் எண்ணிக்கொள்ளக் கடவன். மேலும், உக்கிராணக்காரன் உண்மை உள்ளவன் என்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம். 1கொரிந்தியர் 4:1,2.**

**ஆராய்ச்சிக்கு**

**எபிரெயர் 11:8-12; ரோமர் 4:13,18-21; மத்தேயு 6:24; எபிரெயர் 9:14; 1யோவான் 5:2,3; லூக்கா 16:10-12.**

பெப்ரவரி 3 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



விற்பனையாளர்களுக்கென்று பிரத்தியேக வர்த்தகச் சின்னங்களும் வர்த்தகப் பெயர்களும் உள்ளன; அதுபோல உக்கிராணக்காரர்களுக்கென்று தனித்துவ அடையாளங்கள் உள்ளன. ஆனாலும் பலர் அதை வர்த்தகக் குறியீடுகளாக்கி பிரபலமாகி விடுகிறார்கள்.

ஓர் உக்கிராணக்காரர் கிறிஸ்துவோடு வைத்திருக்கும் உறவின் பிரதிபலிப்பே அவருடைய உக்கிராணத்துவ அடையாளம். இயேசுவின் குணநலன்களை நம் வாழ்க்கையில் வெளிப்படுத்தும்போது, நம் அடையாளக் குறியீடு என்னவென்பதை பிறர் காணமுடியும். அவருடைய சின்னம்தான் நம் சின்னம்; அவரில்தான் நம்மை நாம் எல்லாவிதத்திலும் அடையாளம் காணமுடியும். 1கொரி 6:17.

தேவ உக்கிராணக்காரரின் அடையாளத்தைத் தீர்மானிக்கிற குணலட்சனங்களை இந்த வாரம் ஆராய்வோம். இயேசுவின் வருகையை நாம் ஆவலோடு எதிர்பார்க்கிற உத்வேகத்தைக் இவை கொடுக்கின்றன; சத்தியத்தின் உண்மை உக்கிராணக்காரர்களாக நம்மிடம் தந்துள்ள பணியைச் செய்வதற்கு ஊக்கமளிக்கின்றன. தொலைந்துபோனோரைத் தேடவும் இரட்சிக்கவும் வந்தவரோடு நாம் எவ்வளவு ஆழமான உறவு வைத்திருக்கலாம் என்பதை ஒவ்வொரு குணமும் எடுத்துக் காட்டுகிறது. எவ்வளவு ஆழமாக இந்தக் குணநலன்களை ஆராய்கிறோமோ, அவ்வளவு ஆழமாக நம் வாழ்க்கையில் இவை அங்கமாகிவிடும். இயேசுவின் அன்பும், அதன் சகல ஆற்றல்களும் நம்முடைய அடையாளக் குறியீடாகும்; நம் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் இன்றும் என்றென்றும் அது ஒரு தாக்கத்தை உண்டாக்கும்.

2017, பெப்ரவரி 10 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## உண்மைத்தன்மை

'உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.' 1கொரி 4:2. 'உண்மையுள்ள' ஓர் உக்கிராணக்காரன் 'விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி' ஜெயிக்கவேண்டும். 1தீமோ 6:12. தேவன் 'உண்மையுள்ளவர்.' அவர் நம்மில் கிரியைசெய்ய அவரை அனுமதித்து, நாமும் அவரைப் போல மாறவேண்டும். சரியானது எதுவோ அதில் நமக்குத் தெரிந்த வரையிலும் உண்மையாக வாழவேண்டும்; அதிலும் ஆவிக்குரிய போராட்டங்கள் மத்தியில் உண்மையாக வாழவேண்டும்; இதுதான் உண்மைத்தன்மை.

நல்லதுக்கும் கெட்டதுக்கும், நன்மைக்கும் தீமைக்கும் இடையேயான போராட்டம் நடந்துகொண்டே இருக்கும். உக்கிராணக்காரர்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் உண்மையாக இருப்பதற்குத் தீர்மானிப்பார்கள். ஆஸ்திகளை விரும்புகிறவரா? தேவனுக்கு உண்மையாக இருப்பதிலும், பணஆசையால் உண்டாகும் ஆபத்துகள் குறித்த அவருடைய எச்சரிப்புகளுக்குச் செவிகொடுப்பதிலும் உண்மையாக இருங்கள். புகழுக்காக ஏங்குகிறவரா? தாழ்மைகுறித்து வேதாகமம் சொல்வதிற்கு உண்மையாக இருங்கள். இச்சையான எண்ணங்களால் தடுமாறுகிறவரா? பரிசுத்தம்குறித்த வாக்குறுதிகளுக்கு உண்மையாக இருங்கள். அதிகாரத்தை விரும்பு கிறவரா? எல்லாருக்கும் வேலைக்காரனாக இருக்கும்படி தேவன் சொல்வதிற்கு உண்மையாக இருங்கள். உண்மையாக இருப்பதா? உண்மையற்று இருப்பதா? இது ஒரு கணத்தில் எடுக்கிற முடிவு; ஆனால், விளைவு நித்தியமாக இருக்கும்.

***உண்மையாக இருப்பதுபற்றி எபி 11:8-12, 17-19; ரோமர் 4:13,18-21 ஆகிய வசனங்கள் சொல்வது என்ன?***

---

'உண்மை' என்பதற்கு எபிரெயர் புத்தகத்தில் 'விசுவாசித்தல்' என்கிற சொல் வருகிறது. இதற்கான கிரேக்க வார்த்தைக்கு 'ஆமென்' என்று அர்த்தம்; இதற்கு 'உறுதியான' என்று அர்த்தம். இவற்றிலிருந்து என்ன தெரிகிறது? நாம் பலமாகச் சோதிக்கப்பட்டாலும், தேவனுடைய திட்டத்திற்கு உறுதியாக நம்மை அர்ப்பணித்திருப்பதே உண்மையாக இருப்பது ஆகும்.

சீர்திருத்தவாதியாகிய லூத்தர், பேரரசரிடம் பேசுவதற்குமுன், 'தேவ வார்த்தையை வாசித்தார், தான் எழுதியவற்றையும் வாசித்தார், சரியான பதிலைச் சொல்ல விரும்பினார். பரிசுத்த வேதவாக்கியங்களை நாடினார். உணர்ச்சிப் பெருக்கெடுத்தவராக தன் இடதுகையில் பரிசுத்த வேதாகமத்தைப் பிடித்து, வலதுகையை வானத்திற்கு நேராக உயர்த்தி, நற்செய்திக்கும் உண்மையாக இருப்பதாகவும், தன் சாட்சியின்நிமித்தம் இரத்தம்சிந்த நேரிட்டாலும், தன் விசுவாசத்தை மறைவின்றி அறிக்கையிடுவதாகவும் உறுதிமொழி எடுத்தார்.' – *J. H. Merle d'Aubigné, History of the Reformation (New York: The American Tract Society, 1846), vol. 2, book 7, p. 260.*

மரணபரியந்தம் உண்மையாயிருக்குமாறு வெளி 2:10 கூறுகிறது; ஆண்டவரோடுள்ள நம் அனுதின வாழ்க்கையில் இந்த வார்த்தைகளின்படி எவ்வாறு நடக்கலாம்?

*இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. மத்தேயு 6:24.*

***தேவன்மேல் மெய்ப்பற்றுள்ளவர்களாக வாழ்வதே முக்கியமென இவ்வசனம் எவ்வாறு வலியுறுத்துகிறது?***

---

கர்த்தருடைய நாமம் 'எரிச்சலுள்ளவர்' என்பது. யாத் 34:14. எனவே, அவர்மேல் மெய்யான பற்றுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதற்கு இது ஓர் உரத்த அழைப்பாகும். விசுவாசப் போராட்டத்தின்போது, நாம் யார் என்பதை பற்றுறுதி அடையாளம்காட்டுகிறது; தொடர்ந்து போராட ஊக்குவிக்கிறது.

நாம் தேவன்மேல் மெய்ப்பற்று வைப்பதை அவர் விரும்புகிறார். 1இராஜா 8:61. தற்செயலாக ஏதும் நடந்துவிடுமோ என்று கண்காணிப்பதற்கான ஒப்பந்தமோ, வெறும் விதிப்பட்டியலோ அல்ல இது. மாறாக, நம் தனிப்பட்ட நம்பிக்கை, விசுவாசம், அர்ப்பணிப்பு ஆகியவற்றை வாழ்க்கையில் வெளிப்படுத்துவதாகும்.

***மெய்ப்பற்றின் முக்கியத்துவம் பற்றி 1நாளாகமம் 28:9 சொல்வது என்ன?***

மெய்ப்பற்று இருக்கிற இடத்தில், துரோகம் வெளிப்படவும் வாய்ப்புள்ளது. அன்புபோல மெய்ப்பற்றும் நிபந்தனையின்றி வரவேண்டும்; அல்லது அது உண்மையான பற்றாக இருக்காது. போர்களின்போது சிலசமயம், முன்னணியில் போர்செய்யும் வீரர்கள் பின்வாங்காமல் நின்று போரிடக் கட்டாயப்படுத்தப்படுவார்கள்; இல்லையெனில், அவர்களுடைய மேலதிகாரிகளே அவர்களைச் சுட்டுவிடுவார்கள். இந்த வீரர்கள் தங்கள் கடமையைச் செய்யவேண்டும்; மெய்ப்பற்றால்தான் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லமுடியாது. இப்படிப்பட்ட மெய்ப்பற்றை தேவன் நம்மிடம் கேட்பதில்லை.

யோபைக் கவனியுங்கள். கோர அழிவு அவர் குடும்பத்தையும் ஆஸ்திகளையும் ஆரோக்கியத்தையும் நாசமாக்க இருந்தது; அது அவருக்குத் தெரியாது. தேவன் மேலிருந்த அன்பையும் நம்பிக்கையையும் அர்ப்பணிப்பையும் அவர் உதறியிருக்கமுடியும்; ஆனால், தன் ஒழுக்கத்தீர்மானத்தில் உறுதியாக இருந்தார்; அதுதான் தேவனிடம் அவர் வைத்திருந்த மெய்ப்பற்று. மனிதர் முன்னிலையில் தேவனை ஒளிவுமறைவின்றியும் பயமின்றியும் துதித்தார்; 'அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்' என்றும் சொன்னார். யோபு 13:15. பேரழிவின்போதும் உண்மையாக இருந்ததுதான் மெய்ப்பற்றின் சாராம்சமே; மெய்ப்பற்றுமிக்க உக்கிராணக்காரர்களின் அடையாம் அது.

---

எனக்காக மரித்த ஆண்டவர்மேல் நான் எவ்வளவு மெய்ப்பற்று வைத்திருக்கிறேன்? இன்னும் முழு அளவில் மெய்ப்பற்று வைக்க நான் என்ன செய்யவேண்டும்? உங்களையே நீங்கள் கேட்டுப்பாருங்கள்.

## சுத்த மனச்சாட்சி

நாம் பெறக்கூடிய மேலான விஷயங்கள் பல இருக்கின்றன. ஆரோக்கியம், அன்பு, நண்பர்கள், நல்ல குடும்பம் போன்ற அனைத்தும் பெரிய ஆசீர்வாதங்கள் தாம். ஆனால் இதுபோன்ற மிகமுக்கியமான ஆசீர்வாதங்களில் சுத்தமான மனச் சாட்சியும் ஒன்று.

***துர்மனச்சாட்சி உடையவர்கள், மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யர் என்பதன் அர்த்தம் என்ன? எபி 10:19-22; 1தீமோ 4:1,2.***

நம் வெளிப்புற வாழ்க்கையை உட்புறத்தில் இருந்து கண்காணித்துக் கொண் டிருப்பது நம் மனச்சாட்சியாகும். நம் மனச்சாட்சியானது உன்னதமான, குறை வற்ற ஒரு தரநிலையில் இருக்கவேண்டும்; தேவனுடைய பிரமாணமே அந்தத் தரநிலை. ஆதாமுடைய இருதயத்தில் தேவன் தம் பிரமாணத்தை எழுதியிருந் தார்; ஆனால் பாவமானது அதை அவருடைய இருதயத்திலிருந்து மாத்திரமல்ல, அவருடைய சந்ததியாரின் இருதயத்திலிருந்தும் கிட்டத்தட்ட முற்றிலுமாக அழித்து விட்டது. பிரமாணத்தின் சில பகுதிகள்தாம் மிஞ்சியிருக்கின்றன. புறஜாதியார் மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினால் நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். ரோமர் 2:15. ஆதாம் தோற்ற இடத்தில் இயேசு ஜெயித்தார்; ஏனெனில், தேவனுடைய பிரமா ணம் அவர் 'உள்ளத்திற்குள்' இருந்தது. சங் 40:8.

***துர்மனச்சாட்சியைச் சுத்திகரிப்பதற்கு ஒரே வழி என்னவென்று எபி 9:14இல் பவுல் கூறுகிறார்?***

'மனச்சாட்சியின் உணர்வற்ற இடுக்குகளில் வெளிச்சம் வீசவேண்டும். ஆத்துமாவின் சன்னல்களை உலக ரீதியானவற்றுக்குப் பூட்டிவைத்து, பரலோகத் திற்கு நேராக முற்றிலும் திறந்துவிடவேண்டும். அப்போது நீதியின் சூரியனுடைய பிரகாசமான கதிர்கள் தங்குதடையின்றி உள்ளே செல்லும். மனதானது நன்மை யையும் தீமையையும் பகுத்தறியத்தக்க அதைச் சுத்தமானதாக, குற்றமற்றதாக வைத்திருக்கவேண்டும்.' - *1MCP, p 327,328.* தேவனுடைய பிரமாணம் விசுவாசி யின் உள்ளத்தில் எழுதப்பட்டு, அந்தப் பிரமாணத்தின்படி நடப்பதற்கு அந்தவிசு வாசியும் முயலும்போது, சுத்தமான மனச்சாட்சி நிச்சயம் பிறக்கும்.

குற்றமனச்சாட்சியால் அவதிப்பட்டிருப்பீர்களானால் அதன் கொடுமை உங்களுக்குத் தெரிந்திருக்கும்; உங்களுக்கு விடுதலையே இல்லாததுபோல நித்தமும் அது உங்களை வாதித்திருக்கும். உங்களுக்காகவும் உங்கள் பாவத்திற்காகவும் கல்வாரிச் சிலுவையில் மரித்த இயேசுவை நோக்கிப்பார்ப்பதால் குற்றமனச்சாட்சியின் சாபத்திலிருந்து எவ்வாறு வெற்றிபெறலாம்?

ஆபேல் கீழ்ப்படிதலோடு பலிபீடத்தின்முன் முழங்காலிட்டு,தேவன் சொல்லியிருந்தபடியே பலியாக ஆட்டைக் கொண்டுவந்திருந்தார்; ஆனால் காயீனோ பலிபீடத்தின் அண்டையில் கனிகளைக் கொண்டுவந்து முழங்காலிட்டு, கோபத்தால் கொப்பளித்துக் கொண்டிருந்தார். இருவருமே காணிக்கைகள்தாம் கொண்டு வந்திருந்தார்கள்; ஆனால் ஒருவர்தான் தேவனுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி ஏற்றுக்கொள்ளப்பட்டது; நிலத்தின் விளைச்சல் நிராகரிக்கப்பட்டது. பலி காணிக்கைகளின் நோக்கமும், அது குறித்த கட்டளைகளும் இருவருக்குமே தெரிந்திருந்தபோதிலும், ஒருவர்மட்டுமே ஆண்டவர் சொன்னதற்குக் கீழ்ப்படிந்திருந்தார். ஆதி 4:1-5.

'இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால்தான் இரட்சிப்பு; பலிமுறைகள் இயேசு கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டும் அடையாளங்களாக இருந்தன. இதற்குக் கீழ்ப்படிந்து தேவதிட்டத்தை ஏற்றுக்கொள்ள காயீன் மறுத்ததே ஆபேல் கொல்லப்பட காரணமாக இருந்தது. உலகத்திற்காக கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட இருந்ததைச் சுட்டிக்காட்டின இரத்தத்தைச் சிந்த காயீன் மறுத்தார்.' - *EGW, 6SDABC, p 1109.*

கீழ்ப்படிதல் மனதில் துவங்குகிறது. மேலான அதிகாரமுள்ளவர்களின் கட்டளைகளைச் செய்ய மனதளவில் ஆயத்தப்படுகிற ஒரு மென்மையான செயல் நடைபெறுகிறது. மேலதிகாரமுள்ள ஒருவரோடு ஓர் உறவு துளிர்ப்பதும், அவருக்குக் கீழ்ப்படிய விருப்பங்கொள்வதும்தான் கீழ்ப்படிதல். தேவனோடுள்ள உறவானது தானாக, அன்பால் உருவாகுகிற ஒரு செயலாக இருக்கவேண்டும்; ஒழுக்கமாக நடந்துகொள்ளும் வகையில் அது நம் நடத்தையைத் தீர்மானிக்கவேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படிவது என்றால், நாம் விரும்புகிறவிதத்தில் கீழ்ப்படிவது அல்ல, தேவன் சொல்லுகிறபடி கீழ்ப்படிவதாகும். தேவன் சொல்வதை விட்டுவிட்டு தன் விருப்பப்படி நடப்பதற்கு காயீன் ஒரு சிறந்த உதாரணமாகும்.

***கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தால் இரட்சிக்கப்படுகிறார்கள்; கீழ்ப்படிதலை கிறிஸ்தவர்கள் எவ்வாறு பார்க்கவேண்டுமென 1யோவான் 5:2,3; ரோமர் 1:7; 10:16,17 ஆகிய வசனங்கள் கூறுகின்றன?***

---

நாம் கீழ்ப்படிவது இரட்சிக்கப்படுவதற்காக அல்ல; ஏற்கனவே இரட்சிக்கப்பட்டிருப்பதால். மெய்யான விசுவாசத்தின் நடைமுறை வெளிப்பாடுதான் கீழ்ப்படிதல். சவுலிடம் சாமுவேல், 'கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும்,சர்வாங்கதகனங்களும்பலிகளும்கர்த்தருக்குப்பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்' என்று சொன்னார். 1சாமுவேல் 15:22.

பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமம் என்று சாமுவேல் சொன்னதின் அர்த்தம் என்ன? மலிவான கிருபையைப் பரப்பும் பொய்ச் சுவிசேஷக் கண்ணியில் கிறிஸ்தவர்கள் சிக்கிவிடாதிருக்க இது எவ்வாறு உதவக்கூடும்?

## நம்பத்தகுந்த நிலை

***நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக நடந்துகொள்வதுபற்றி லூக்கா 16:10-12 வசனங்களிலிருந்து என்ன அறிந்துகொள்ளலாம்? இது ஏன் உண்மையுள்ள ஓர் உக்கிராணக்காரரிடம் காணப்பட வேண்டிய மிகமுக்கியக் குணமாக இருக்கிறது?***

நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாக நடந்துகொள்ளுமாறு வேதாகமம் முழுவதிலுமே வலியுறுத்தப்படுகிறது. உதாரணமாக, பழைய ஏற்பாட்டுக்கால ஆசரிப்புக் கூடாரத்தை இரவு நேரத்தில் காவல்காக்கிற பணியானது லேவியரான பிரதான காவலர்கள் நால்வரிடம் ஒப்படைக்கப்பட்டது. பொக்கிஷங்கள் நிறைந்த அறைகளின் சாவிகள் அவர்களிடம் இருந்தன; தினமும் காலையில் அவற்றைத் திறந்துவிடவேண்டும். 1நாளாக 9:26,27. அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாக எண்ணப்பட்டதாலேயே இந்தப் பணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது உண்மையான ஓர் உக்கிராணக்காரரிடம் காணப்படும் குணமாகும். நம்பிக்கைக்கு பாத்திரவான்களான உக்கிராணக்காரர்கள் தங்களுடைய பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பார்கள்; தேவன் நம்பிக்கைக்குப் பாத்திரர் என்பதையும் உணர்ந்து, தாங்களும் அப்படியே நடப்பார்கள். உபா 32:4; 1இராஜா 8:56.

நம்பிக்கைக்குப் பாத்திரம் என்பது முதிர்ச்சியடைந்த குணநலன்களில் ஒன்றாகும். பிறருடைய பார்வையில் தனியாக, உயர்தரமாகத் தெரியக்கூடிய ஒரு குணமாகும். அது தேவனுடைய குணத்தின் பிரதிபலிப்பாகும்; அதாவது, மற்றவர்களின் அழுத்தமும், சூழ்நிலைகளின் அழுத்தமும் நெருக்கடி தந்தாலும்கூட, கொடுத்த வாக்கை நிறைவேற்றப் பாடுபடுவார்கள்.

இரண்டு உலக ராஜ்யங்களின் பேரரசர்கள் தானியேலை நம்பிக்கைக்குப் பாத்திரவானாகக் கருதினார்கள். அவர் தன் வாழ்நாள் முழுதுமே, ராஜாக்களிடம் உண்மையும் ஞானமுமான வார்த்தைகளைப் பேசினார்; ஆனால், அரசவை ஜோசியர்களும் குறிசொல்லுகிறவர்களும் அதற்கு எதிர்மாறாக இருந்தார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரம் என்பது நன்னெறிகளின் மணிமகுடம்; ஒழுக்க நியதிகளின் கறைதிரையற்ற வெளிப்பாடு. இக்குணம் ஓர் உக்கிராணக்காரரிடம் ஒரே நாளில் உருவாவது அல்ல; சிறுசிறு காரியங்களில் உண்மையாக இருப்பதன்மூலம் காலப்போக்கில் உருவாவது.

இது பிறர் கவனிக்கிற ஒரு குணமாகும். ஆதாரமற்ற கருத்துகளுக்கும் பொய்களுக்கும் முகஸ்துதிக்கும் எளிதில் அசையாதவர்கள் என்று நம்மைநம்பி, மதித்து, சார்ந்திருக்கும் ஒரு குணமாகும். பரலோகத்திற்கான ஆயத்தக்களமான பூமியில் செய்யப்படும் ஒவ்வொரு பொறுப்பான வேலையிலும் வெளிப்படவேண்டிய குணமாகும். 'தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்கள்போல ஐசுவரியமும் நற்குணமும் இரக்கமும் கனிவும் மனிதாபிமானமும் தங்களிடம் காணப்படுவது போல உலக ஞானிகள் நடந்துகொண்டாலும், கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் உண்மையான, நம்பிக்கைக்கு பாத்திரமான குடிமக்களாக நாம் நடக்கவேண்டும்.'
- *EGW, 6T, p 190.*

யாரையாவது நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாகக் கருதியிருக்கிறீர்களா? உங்களிலும் அக்குணம் அதிகமாகக் காணப்படுவதற்கு அவரிடமிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?

நல்ல உக்கிராணக்காரரின் இன்னோர் அடையாளம் தனிப்பட்ட விதத்தில் பொறுப்பாளியாக இருப்பதாகும்.

'தேனிடமிருந்து மனிதரின் பார்வையை வேறுபக்கம் திரும்பச்செய்து, தங்களுடைய பொறுப்பை அவர்கள் மறக்கும்படிச்செய்வதே சாத்தானுடைய திட்டமாக இருக்கிறது. தேவகுமாரனிடம் அத்திட்டத்தை நிறைவேற்ற நினைத்து சாத்தான் தோற்றான்; ஆனால், விழுந்துபோன மனிதரிடம் இதில் அவனுக்கு வெற்றிதான். கிறிஸ்தவ மார்க்கம் சீர்கெட்டுப்போனது.' – *EGW, Early Writings, p 213.*

கிறிஸ்துவை மையமாக வைத்து, அவருடைய வழிநடத்துதலுக்கு இணங்க வேண்டும். அப்போது, விசுவாசமும் மெய்ப்பற்றும் கீழ்ப்படிதலும் சுத்தமான மனச்சாட்சியும், நம்பிக்கைக்கு பாத்திரமாக இருப்பதும், தனிநபர் பொறுப்பும் நம் வாழ்வில் வெளிப்படும். இப்படி, உக்கிராணக்காரர்களாக தேவனுடைய கரங்களால் பூரணர்களாக்கப்படுகிறோம். சங் 139:23,24.

தனிநபர் சொந்தப் பொறுப்பு என்பது இன்றியமையாத ஒரு வேதாகம நியதி. இயேசு இப்பூமியில் இருந்தபோது, தம் பிதாவுக்கு தனிப்பட்ட விதத்தில் பொறுப்புடையவராக இருந்தார். யோவான் 8:28. வீணான ஒவ்வொரு வார்த்தைக்கும் நாம் பொறுப்பாளிகள். மத் 12:36. 'எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்.' லூக் 12:48. நம் பொறுப்புகளை பிறர்மேல் சுமத்துகிற தன்மைதான் தனிநபர் பொறுப்புக்கு வரும் மிகப்பெரும் அச்சுறுத்தலாகும். 'நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளவற்றிற்கு நாம் சொந்தக்காரர் கள் அல்லர் என்பது எப்போதும் மனதில் இருக்கவேண்டும். இல்லையென்றால், தன்னிச்சை அதிகாரம் வரும்; நம் பொறுப்பை பிறர்மேல் சுமத்தி, அவர்களிடம் நம் உக்கிராணத்துவத்தை விட்டுவிட நேரிடும். இப்படி இருக்கக்கூடாது; ஏனென்றால், தேவன் நம் ஒவ்வொருவரையும் தம்முடைய உக்கிராணக்காரர்களாக்கியுள்ளார்.' – *EGW, 7T, p 177.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *தனிநபர் பொறுப்பு, நம்பகத்தன்மை, கீழ்ப்படிதல், மெய்ப்பற்று, சுத்த மனச்சாட்சி, உண்மைத்தன்மை போன்ற உக்கிராணத்துவ அடையாளங்கள் நம்மிடம் காணப்படுகின்றனவா? ஒன்றில் நிர்விசாரமாக இருப்பது எவ்வாறு மற்றதிலும் பாதிப்பை உண்டாக்கும்? ஒன்றில் உண்மையாக இருந்தால், எவ்வாறு மற்றதிலும் உண்மையாக இருக்கலாம்?*

2. *குற்ற உணர்வால் வாதிக்கப்படுபவர்களுக்கு நற்செய்தியின் வாக்குறுதிகள் எவ்வாறு உதவியாக இருக்கும்? சில வாக்குறுதிகளைக் குறிப்பிடுங்கள்.*

3. *மெய்ப்பற்று தன்னில்தானே சிறந்த ஒரு குணமா? யாராவது அல்லது ஏதாவது ஒன்றின்மேல் மெய்ப்பற்று வைப்பது எவ்வாறு தவறானதாக இருக்கலாம்? அப்படியானால், நம்முடைய மெய்ப்பற்று நல்லதா, கெட்டதா என்பதை எவ்வாறு அறியலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*